Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 18 சனிக்கிழமை (03-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 242

## ஆனையிறவுப் பகுதியில்

# நேற்று சண்டை தணிந்திருந்தது!

### காவல் அரண்களை பலப்படுத்த முயற்சி

யாழ்ப்பாணம், ஆக. 3

ஆனையிறவுப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையிலான மோதல்கள் ஓரளவு தணிந்திருந்ததாக நேற்று மாலையில் போர்முனைச் செய்திகள் தெரிவித்தன.

இரு தரப்பினரும் நேற்று தாம் நிலைகொண்டிருந்த பகுதிகளில் காவல் அரண்கள் மற்றும் நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இருந்த நிலைகளிலேயே இரு தரப்பினரும் நேற்றும் நிலை கொண்டிருந்தனர்.

நேற்று மோதல்கள் நடைபெறாத போதிலும் விமானத் தாக்குதல்கள் பரவலாக இடம் பெற்றன.

ஆனையிறவு முகாமை விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டு நேற்றுடன் 24நாட்கள் பூர்த்தியாகிவிட்டன.

முகாமை மீட்பதற்காக வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடல் வழியாகத் தரையிறங்கிய ஸ்ரீலங்காப் படை மூன்று வார கால கடும் முயற்சிக்குப் பின் முகாமை நெருங்கியுள்ள போதிலும் —

புலிகளின் கடும் எதிர்ப்பினால் முகாமிற்குள் நுழைய முடியாது திணறி வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-த-3-15)

## 15 கெரில்லா குழுக்கள் தமிழகத்தில் தயாராகின்றன

### விரைவில் பிரிவினைப் போர்

தமிழ் நாட்டில் விரைவில் பிரிவினை கோரி ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகும். தமிழகத்தின் பல பகுதிகளிலும் சுமார் பதினைந்து குழுக்கள் கெரில்லாப் போராட்டத்துக்குத் தயாராகி வருகின்றன.

—இவ்வாறு வெரித்தாஸ் வானொலியில் சிங்கள ஒலிபரப்பில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

இந்த கெரில்லா போராட்டக் குழுக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்று வருவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## வியாழனன்று 24 படையினர் பலி!

கொழும்பு, ஆக. 3

ஆனையிறவுப் பகுதியில் நேற்று முன்தினம் [வியாழன்] இடம்பெற்ற மோதல்களில் 24 படையினர் உயிரிழந்ததாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டன.

முகாமை மீட்கச் சென்றுள்ள துருப்புக்கள் முகாமை மிக நெருங்கியிருப்பதாகவும்—

முகாம் அவர்களுக்கு துலாம்பரமாகத் தெரிவதாகவும்—

எந்த நேரத்திலும் அவர்கள் முகாமிற்குள் பிரவேசிக்கக் கூடும் என்றும் ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

''இருதரப்புமே சலிக்காமல் போர் புரிகின்றன. ஆனையிறவு முகாமை எந்தத் தரப்பு தங்கள் வசப்படுத்தினாலும் சண்டை நின்று விடப்போவதில்லை. அடுத்த கட்ட கடும் தாக்குதலின் தொடக்கமே இச் சண்டை''— இவ்வாறு ஏ. எவ். பி. செய்தியாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா பொம்மர் நேற்றும் சேதம்!

யாழ்ப்பாணம், ஆக.3

ஆனையிறவுப் பகுதியில் நேற்று குண்டு வீச்சில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா விமானப் படையின் பொம்மர் ஒன்று புலிகளின் தாக்குதலினால் சேதமுற்றது என்றும்—

சேதமடைந்த பொம்மர் அவசர அவசரமாக பலாலியில் தரையிறக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவுச் சண்டையின் போது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் இதுவரை இரண்டு பொம்மர்கள், ஒரு சீனச் சகடை விமானம், ஒரு ஹெலி என்பன சேதமடைந்திருப்பதாகத் தகவல் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## சேந்தான்குளம் பகுதியில் பொம்மர்கள் குண்டு வீச்சு

கீரிமலை - சேந்தான்குளம் பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

காலை வேளையிலும் இப் பகுதிகளில் பொம்மர்கள் சுற்றிச் சுற்றி குத்திப் பதிந்து விட்டுச் சென்றன தாக்குதல் ஏதும் நடத்தவில்லை.

பிற்பகல் நடந்த குண்டு வீச்சுக்களினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (ஒ)

## வலிகாமம் பகுதியில் நேற்று பொம்மர், ஹெலி நோட்டம்

காங்கேசன்துறை, ஆக. 3

பலாலி முகாமை அண்டிய வலிகாமம் பகுதியில் நேற்று முழு நாளும் பொம்மர்கள், ஹெலி, சீ-பிளேன் ஆகியன சுற்றிச் சுற்றி வட்டமிட்டு நோட்டம் விட்டன.

பிற்பகல் ஒரு மணியளவில் வளலாய்ப் பகுதியில் பொம்மர்கள் குண்டு வீச்சுக்கள் நடத்தின என்றும் வயல் வெளி பகுதிகளில் குண்டுகள் விழுந்து வெடித்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பலாலியைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்று பொம்மர்கள் அடிக்கடி வட்டமிட்டதால், பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை—

நேற்று முன்தின முன் மாலை 6 மணியளவில் கட்டுவன் பகுதியில் பொ[illegible] குண்டு வீச்சு இடம்[illegible] தாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-68-15]

# கிட்டுவை நாடுகடத்த பிரிட்டன் முஸ்தீபு!

### ஐந்து நாள் கால அவகாசம் வழங்கி நோட்டீஸ்

லண்டன், ஆக. 3

லண்டனில் தங்கியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான திரு. சதாசிவம் கிருஷ்ணகுமாரை (கிட்டுவை) நாடு கடத்துவதற்கு பிரிட்டிஷ் அரசு உத்தேசித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நாடு கடத்தும் உத்தேசத்தைத் தெரிவித்து, பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு நேற்று திரு. கிட்டுவுக்கு நோட்டீஸ் அனுப்பியது.

அவரை ஏன் நாடு கடத்தக் கூடாது என்பதற்கு எதிர் வரும் 7 ஆம் திகதிக்கு (புதன் கிழமைக்கு) முன்னர் காரணம் காட்டுமாறு திரு. கிட்டுவை இந்த நோட்டீஸில் உள்துறை அமைச்சு கேட்டிருக்கிறது.

லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் சர்வதேச தலைமைப் பணிமனையின் தலைவராக கடந்த 18 மாதங்களாக திரு. கிட்டு செயற்பட்டு வருகிறார்.

திரு. இட்டு ஆறு மாதகால விஸாவுடன் லண்டன் வந்து சேர்ந்தார். பின்னர் அவரது விஸா மேலும் ஆறு மாத

(4ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் பலி!

கொழும்பு, ஆக. 3

ஆனையிறவுச் சண்டையில் ஸ்ரீலங்கா துணைப் படைப் பிரிவின் நான்காவது பட்டாலியனைச் சேர்ந்த அதிகாரியான மேஜர் பி. எல். ரி. சேரசிங்க எனபவரும் பலியானதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(உ-10)

## வெளியேற்றும் உத்தரவு எனக்கு வழங்கப்படவில்லை!

### கிட்டு பி.பி.ஸிக்கு பேட்டி

பிரிட்டனை விட்டு வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது குறித்து விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. கிட்டு லண்டனில் நேற்று பி. பி. ஸி. ஆங்கில சேவைக்கு பேட்டியளித்தார்.

அவர் கூறியதாவது :-

''ஆகஸ்ட் 7ஆம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு நான் வெளியேற வேண்டும் என்று தெரிவிக்கும் கடிதம் உள்துறை அமைச்சிலிருந்து கிடைத்துள்ளது.

ஆனால் அது நாட்டை விட்டு வெளியேற்றும் உத்தரவு அல்ல; வெளியேறும்படி கேட்கப்பட்டுள்ளேன் அவ்வளவுதான்.

இந்த விடயத்தை சட்ட நிபுணர்களின் ஆலோசனைக்கு கொடுத்துள்ளேன். ஆகையினால் இந்நிலையில் அதுபற்றி மேலதிகமாக ஏதேனும் கூறுவது பொருத்தமற்றது — என்றார். [உ-3]

## செபஸ்தியார் ஆலயம் பலத்த சேதம்

தென்மராட்சி, ஆக். 3

சீனச் சகடை விமானம் நேற்று முன்தினம் நடத்திய குண்டு வீச்சில் புல்லாவெளி செபஸ்தியார் தேவாலயம் பலத்த சேதமடைந்தது.

கடந்த வாரம் இடம்பெற்ற [illegible] மடைந்திருந்தது தெரிந்ததே. [ஒ-117]

## பெங்களூரில் 2 ஈழத் தமிழர் சயனைட் அருந்தி மரணம்

சென்னை, ஆக. 3

கர்நாடகத் தலைநகர் பெங்களூரில் நேற்று ஈழத் தமிழ் இளைஞர்கள் இருவரை இந்தியக் காவல்துறையினர் கைது செய்ய முற்பட்டபோது அவர்கள் சயனைட் அருந்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சயனைட் அருந்திய இருவரில் ஒருவர் உயிரிழந்தார். மற்றவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீடொன்றில் தங்கியிருந்த இந்த இருவரையும் கைது செய்வதற்காக படையினர் வீட்டுக் கதவைத் தட்டிய போதே அவர்கள் சயனைட் அருந்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணப்பெண் தேவை

யாழ். இந்து குற்றமற்ற 34 வயது மெக்கானிக்கல் என்ஜினியருக்கும், 36 வயது எக்கவுண்டனுக்கும், 31 வயது வங்கி ஊழியருக்கும், குற்றமுள்ள 31 வயது I.C.M.A. க்கும், 40 வயது வர்த்தகருக்கும், Non, R C 30 வயது I.C.M.A. க்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம்.
(17712)

### மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து குற்றமற்ற 25 வயது A/L ஆசிரியைக்கு T.A., B.Sc. அல்லது ஒத்து வரக்கூடிய மணமகன் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வீடு தரப்படும். நட்சத்திரம் புநர்பூசம் – 2 மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
(17711)

### தவறிவிட்டது

குணபாலன் இன்பராணி ஆகிய எனது அடையாள அட்டை [567703517V] ஆஸ்பத்திரி வீதிக்கும், ஒட்டுமடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (17724)

### வினா – விடை

க. பொ. த. சாதாரண தரம் 1990 / 1991 சித்திரப் பாடம் பயிலும் மாணவ மாணவியருக்கு உபயோகமான வினாக்களும், விடைகளும் பூபாலசிங்கம், மண்டேலா, ஸ்ரீகாந்த், மக்மிலன், இனேஷ், ஆல்சிலோன், ஸ்ரீலங்கா, வாலாம்பிகா, சிவாஸ், பாரதி, தாரா, மிடில்பேர்க் ஆகிய புத்தகசாலை எங்கும் பெற்றுக் கொள்ளலாம். (17719)

### விற்பனைக்கு

இரண்டு அறை கட்டக் கூடிய பனைமரக் கப்புகள், கதவு, நிலை, சீலிங்பலகை உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: துர்க்கா ரெக்ஸ், [உட்புறப்] 164, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(17707)

## அறிவித்தல்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரமரணமடைந்த யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் பற்றிய விவரங்களைத் தந்துதவுமாறு கல்லூரியின் நலன் விரும்பிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
–யாழ். இந்துக் கல்லூரி.

[17722]

## அந்தியேட்டி அழைப்பு

### அமரர் அ. தருமலிங்கம்

(இளைப்பாறிய புகையிரதப்பகுதி உத்தியோகத்தர்)

**தோற்றம்:** 26–3–1921 **மறைவு:** 5–7–1991

4-8-1991 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டி கிரியையும், சபீண்டீகரணக்கிரியையும் காலை 10–00 மணிக்கு நடைபெற இருப்பதால், இக்கிரியைகளுக்கு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் சமுகம் தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

[17644]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



சின்னத்தம்பி செல்லாச்சி
தோற்றம்: 23 — 01 — 1912



திருமதி சடாச்சரம் தங்கம்மா (அரசமணி)
தோற்றம்: 25 — 12 — 1944



செல்வி சாந்தினி சடாச்சரம் (சாந்தினி)
தோற்றம்: 22 — 02 — 1968

**மறைவு: 25 — 07 — 1989**

எங்கள் உயிருக்கும் மேலான அன்புத் தெய்வங்களே! எங்களைப் பிரிந்து 2 ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் அகலா. தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கணவர்: சடாச்சரம்,
மக்கள்: நந்தினி, இந்துமதி,

அப்பா: சடாச்சரம்,
தங்கைகள்: இந்துமதி, நந்தினி.

அல்லையம்பதி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

[4223]

ஆனையிறவு மண்மீட்புப் போரில் வீரமரணமடைந்த
யாழ். இந்துவின் மாவீரர்களுக்கும் மற்றும்
மாவீரர்களுக்கும்

# வீர அஞ்சலி

**குருபரன்**
(சா. சாந்தகுமார்)
கிளிநொச்சி



**நெல்சன்**
(கோ. சுந்தரேசன்)
கரும்பனை

முப்படையின் முழுப்பலத்தை
முனைப்போடு எதிர் கொண்டு
இப்புலிகள் இருபது நாள்
இருங்கடல் வான் வெளியதிர
மோதும் ஆனையிறவுப் போர்
முனையினிலே மறம் புரிந்து
சாதமுவிச் சரித்திரத்தின்
நாயகர்களாகிவிட்ட
இந்து தந்த வரிப்புலிகாள்
ஜீவராசா, சாந்தகுமார்
சுந்தரேசன் தியாகிகளே
தொலைத் தெதிரிப் படை விரைவில்
வந்துதிக்கும் ஈழம் உம்மை
வாழ்த்தி நிற்கும் மலர் தூவி

**சொந்த மண்ணை மீட்கும் வரை
தொடர்வோம் நீர் விட்டபணி!**



லெப். கேணல் **சரா**
(சி. ஜீவராசா)
கல்வியங்காடு

[17721]

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர், மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதயன்

### காதகக் கமக்காரன்!

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டுள்ள ஈழத் தமிழ் அகதிகள் அனைவரும் நாடு கடத்தப்படுவார்கள். இந்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் இதனை அறிவித்திருக்கிறார்.

ஓநாய்க்குப் பயந்து, உயிரைக் காப்பாற்றும் பொருட்டு கமக்காரன் வீட்டுக்குத் தஞ்சம் கேட்டு ஓடிய ஆட்டுக்குட்டியை, அவன் பிடித்து ஓநாயிடமே கொடுத்த கதைக்கு இந்தியா கருவிட்டுள்ளது.

ஓநாய் துரத்திக்கொண்டு வந்தபோது, தான் தஞ்சம் புக நினைத்த கமக்காரன் காதகன் என்பது, பாவம் ஆட்டுக்குட்டிக்குத் தெரியாது. உயிரைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற அவசரத்தில் பதற்றத்தில் அருகில் உள்ள கமக்காரன் வீட்டில்தான் புகலிடம் தேட முடிந்தது. அவன் தன்னைக் கட்டிவைத்து அரைத் தீனி போட்டுவிட்டு ஓநாயிடமே ஒப்படைத்து விடுவான் என்பதை ஆட்டுக்குட்டி அறிந்திருக்கவில்லை!

ஆம். தமிழ் இன ஒழிப்பில் ஈடுபட்டுள்ள சிங்கள அரசிடம் இருந்து, அதன் ஆயுதப் படைகளிடம் இருந்து, அந்த ஆயுதப்படைகளின் அட்டகாசங்களில் இருந்து தப்புவதற்காக, தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரேயொரு நோக்கத்துடன் மட்டுமே ஈழத் தமிழ் அகதிகள் தமிழகத்துக்கு ஓடினார்கள். தமிழகத்துடன் உள்ள இன இரத்த உறவும், அது ஈழத்துக்கு அருகில் உள்ளது என்ற சாதகமான பூலோக அமைப்பும் அவர்களை அங்கே செல்லத் தூண்டியது.

முன்னர், 1987 இல், ராஜீவ் பதவியில் இருந்தபோது, ஈழத் தமிழர் நலனுக்காக ஸ்ரீலங்கா அரசுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதாகக் காட்டிக் கொண்டு—

அவர்களின் நலன்களை உதாசீனம் செய்து, தனது சொந்த நலன் வேண்டி ஓர் ஒப்பந்தத்தைச் செய்து தமிழர்களுக்குத் துரோகம் செய்தது.

இப்போதும் ஸ்ரீலங்காவுடன் கைகோர்த்துக் கொண்டு, தன்னிடம் தஞ்சம் புகுந்த தமிழர்களை அதனிடம் ஒப்படைத்து இரையாக்குவதற்கு முடிவு செய்திருக்கிறது.

தமிழகம் — இந்தியா — தங்களைக் காப்பாற்றிப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையோடு அங்கு சென்ற அப்பாவி ஈழத் தமிழர்களை ஸ்ரீலங்கா அரசிடம் ஒப்படைத்துத் துரோகம் செய்ய முடிவு செய்திருக்கிறது. இது நம்பிக்கைத் துரோகமா அல்லது மனித இயல்பு இழந்த கொடூரத்தனத் துரோகமா? இரண்டும் ஒன்றுதிரண்ட பெருந்துரோகம். மறக்க முடியாத துரோகம்.

ஆகையால் ஈழத் தமிழர்கள் இனிமேல் இந்தியாவை எந்த வகையிலும் நம்பக்கூடாது என்று அது அவர்களுக்குப் பாடம் புகட்டியிருக்கிறது!

ஒரு காலம் இந்தியா புண்ணிய பூமியாகப் பெருமைப் பாராட்டப்பட்டது. அந்தப் பெருமையில் சிறிதளவேனும் இப்போது இருப்பதாக அது கருதுமானால் —

ஈழத் தமிழ் அகதிகளை நாடு கடத்தி ஸ்ரீலங்கா அரசிடம் ஒப்படைக்காமல், அவர்கள் தாமாகவே தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதிக்க வேண்டும். அவர்கள் தமது சொந்த மண்ணுக்கு வந்து வாழ்வா சாவா என்று முடிவு செய்ய விட்டுவிட வேண்டும்.

# மரபுவழிபோர் வளர்வதா? இல்லையா?

# மக்களே முடிவு செய்ய வேண்டும்

## போர்க்காலக் கருத்தரங்கில் யோகி

யாழ்ப்பாணம், ஆக. 3

கரந்தடிப்படையாக இருந்த எமது இயக்கம் இப்போது மரபுவழி இராணுவமாகவும் செயற்பட்டுப் போர் நடத்துகிறது.

மரபு வழிப் போராட்டம் வளர்ந்து எமது இலட்சியத்தை விரைவில் அடைய வேண்டுமா அல்லது நாம் மீண்டும் கரந்தடிப் படையாக மாற வேண்டுமா என்பதை மக்கள் தரும் ஆதரவே தீர்மானிக்கும். அதாவது மக்களே அந்த முடிவை மேற்கொள்வர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற போர்க்காலச் சூழ்நிலை தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அங்கு திரு. யோகி மேலும் தெரிவித்ததாவது:-

இன்று பெரும் போராட்டச் சூழலிலே— போராட்டக் களத்திலே நாம் நிற்கிறோம். எமது சிந்தனைகளும் செயல்களும் ஒன்றிணைந்துள்ளனவா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### முதலாவது மரபு வழிப் போர்

ஆனையிறவில் பெரிய போராட்டம் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ஒரு மரபு வழிப் போர். முதன்முதலாக வாழ்நாளிலே தமிழர்கள் ஒரு பெரும் போரைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்.கோட்டை முற்றுகையின் போதும் எமது போராளிகள் கோட்டைச் சுவர் மீது ஏறி வீரத்துடன் போரிட்டார்கள். எமது போராளிகள் தொடர்ந்து தாக்கியிராவிடில் கோட்டை இராணுவம் ஆஸ்பத்திரி வரை வந்திருக்கும்.

ஆனால் கடைசியில் எமக்கு தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் இராணுவம் கோட்டையில் இருந்து வெளியேற வேண்டியதாயிற்று.

ஆனையிறவுச் சண்டையில் நாம் வெற்றி பெற்றால் மிகக் குறுகிய காலத்தில் எமது போராட்டத்தின் குறிக்கோளை அடைவோம். இந்தச் சண்டையில் வெற்றி பெறாவிட்டால், அடுத்த கட்ட வளர்ச்சிப் பாதையில் எமது போராட்டம் தொடர்ந்து செல்லும்.

### 50 ஆயிரம் பேர் கொண்ட படை தேவை

1972, 73, 74ஆம் ஆண்டுகளில் தமது நூறு போராளிகளையாவது சீருடையில் காணவேண்டும் என்று தலைவர் ஆசைப்பட்டார்.

ஆனால் இன்று ஆயிரக் கணக்கான போராளிகளைக் கொண்டதாக எமது இயக்கம் வளர்ச்சி அடைந்துள்ளது. 50 ஆயிரம் பேரைக் கொண்ட ஒரு படையாக நாம் வளர வேண்டும் என்பதே எமது தற்போதைய விருப்பம்.

உலகில் உள்ள நவீன ஆயுதங்களை எல்லாம் நாம் வைத்திருக்கிறோம்.

தமிழீழ மக்கள் அனைவரும் எம்முடன் இந்தப் போராட்டத்தில் இணைய வேண்டும்.

எமது மரபுவழிப் போராட்டம் வளர்ந்து அதன் மூலம் தமிழீழம் மீட்கப்பட வேண்டுமா? அல்லது நாம் மீண்டும் கரந்தடிப் படையாக மாறுவதா? என்பதை தமிழீழ மக்களே தீர்மானிக்க வேண்டும்.

இந்த மண் மீட்கப்பட வேண்டும். அடிமையாக வாழ நாம் என்றும் தயாராக இல்லை. இந்த மண் மீட்புப் போரில் இறந்த போராளிகளுக்குத் துரோகம் செய்ய நாம் தயாரிலலை.

முதற் தடவையாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணி ஒன்றை நாம் உருவாக்கி உள்ளோம். தமிழரின் தேசிய படை அணி ஒன்று உருவாக்கப் பட்டிருப்பது இதுவே முதல் தடவை.

இப்படி திரு. யோகி கூறினார்.

மாணவர்களின் எழுத்து மூலக் கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கையில் —

ராஜீவ் காந்தியை காசி ஆனந்தன் சந்தித்தது உண்மைதான் என்றும் ஆனால் அந்தச் சந்திப்பின் போது இரு தரப்புக்கும் இடையில் கசப்புணர்வு ஏதும் ஏற்படவில்லை என்றும் கூறினார்.

''ஆனையிறவில் தற்போது நடக்கும் சண்டைக்குத் தலைவர் பிரபாகரனா தலைமை வகிக்கிறார்?'' என்ற கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில் —

எமது ஆயுதப் போராட்டங்களை முழுமையாகத் தலைவர் பிரபாகரனே வழி நடத்துகிறார். தலைமை எங்கு தேவைப்படுகிறதோ அங்கு அவர் செயற்படுவார் — என்று சொன்னார்.

மற்றும் ஒரு கேள்விக்கு திரு. யோகி பதில் அளிக்கையில், தனியார் கல்வி நிலையங்கள் இயங்கும். ஆனால் போர்க்காலச் சூழ்நிலையில் இயங்கா என்றார். [அ-இ]

## யாழ். இந்துவில் விசேட பூசை

யாழ்ப்பாணம், ஆக. 3

ஆனையிறவு, கட்டைக்காடு மோதல்களில் வீரமரணமடைந்த போராளிகளின் ஆத்மா சாந்திக்காகவும், ஆனையிறவு மண்மீட்புப் போரில் புலிகளின் வெற்றிக்காகவும் யாழ். இந்துக்கல்லூரி சிவஞான வைரவர் ஆலயத்தில் இந்து இளைஞர் கழகத்தினர் நேற்று விசேட பூசை, ஆராதனைகளை நடத்தினர். இந்தப் பூசை நிகழ்ச்சியில் பெரும் எண்ணிக்கையான மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (ஒ)

## நெல்லியடியில் முதலுதவி பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஆக. 3

வடமராட்சிப் பகுதி மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சி நெறி நாளை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் யாழ். கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவால் ஆரம்பித்து வைக்கப்பட இருக்கிறது.

ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களையும் நாளைய தினம் சமுகமளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. [ஒ-3]

## தொண்டர்கள் கடமை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 3

போராளிகளைப் பராமரிக்கும் தொண்டர்களுக்கான கடமை நேரம் இன்று முதல மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பாலம் பணிமனை பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

காலையில் 6. 00 மணிக்கு வரவேண்டிய தொண்டர்கள் காலை 7. 30 மணிக்கும் — மாலை 6 மணிக்கு வரவேண்டிய தொண்டர்கள் இரவு 7. 30 மணிக்கும் சமுகமளிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஒ-3)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 3

சகல அரச, திணைக்கள, கூட்டுத்தாபன தலைவர்கள் மற்றும் அதிகாரிகளையும் நாளை காலை 10 மணிக்கு செயலகத்தில் நடைபெற இருக்கும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். [ஒ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 3

யாழ். இந்துக் கல்லூரியில் ''ரெஸப்'' (TACEP) பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 2 மணிக்கு நடைபெறவிருப்பதால் சகல உறுப்பினர்களையும் அதில் பங்குபற்றுமாறு இணைப்பதிகாரி [illegible] ளார். [உ-3]

## உணவு நிலைமை பற்றி பேச அரச அதிபர் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். மாவட்டத்தில் ஏற்கப்பட்டுள்ள பட்டினி நிலை குறித்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் நேற்றுக் கப்பல் மூலம் கொழும்பு சென்றுள்ளார்.

உணவு நிலைமை மற்றும் எரிபொருள், மருந்து வகைகளின் பற்றாக்குறை உட்பட ஏனைய அவசர தேவைகள் குறித்து அவர் அங்கு பேச்சுக்கள் நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-3]

## இடம்பெயர்ந்த மாணவரும் பரீட்சை எழுதும் வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஆக. 3

வடபகுதியில் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை ஆரம்பமாகும்போது, இடம்பெயர்ந்த மாணவர்களும் பரீட்சைக்கு தோற்ற வாய்ப்பளிப்பதற்கு பரீட்சை ஆணையாளர் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர் வெதமுல்ல நேற்று வவுனியா அரச அதிபர் மூலம் யாழ். கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ள செய்தியிலேயே இது விடயமாக இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அனுமதி அட்டை கிடைக்காதுவிட்டாலும் அவர்கள் தோற்ற வசதியாக விசேட பரீட்சை நிலையம் அமைக்கவும்—

90 ஆம் ஆண்டு விசேட ஜி. சீ. ஈ. (உயர்தர) [illegible] இந்தப் பரீட்சையிலும் பாடசாலை பரீட்சார்த்திகளாக தோற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார். [ஒ-3]

## விவரங்களை தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம். ஆக. 3

வட இலங்கை சங்கீத சபையின் வைர விழா நிகழ்ச்சிகள் எதிர்வரும் ஆறாம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன.

சங்கீத சபையில் இதுவரை ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற கலைஞர்களுக்கான பட்டமளிப்பு நிகழ்ச்சி விழாவில் முக்கிய அம்சமாக நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் தகைமை பெற்றவர்கள் இன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னர் தமது விவரங்களை கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு பணிப்பாளர் கோரியுள்ளார். (உ-3)

## மேஜர் கணேஸின் புகழுடல் தகனம்

யாழ்ப்பாணம், ஆக. 3

ஆனையிறவு மண்மீட்புப் போரில் ஈடுபட்டு நேற்று முன்தினம் வீரமரணமடைந்த மேஜர் கணேஸின் புகழுடல் நேற்று வடமராட்சி மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமானது.

பல்வேறு தாக்குதல்களிலும் வீர சாதனைகள் படைத்துள்ள கணேஸ், ஆனையிறவு உல்லாச விடுதி வெற்றித் தாக்குதலிலும் மிக முக்கிய பங்குவகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## ஆணைக்குழுத் தலைவரை நியமிக்க டில்லி பணிப்பு

ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமான சதிமுயற்சி, அதில் ஈடுபட்டதாகக் கருதப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகள் எவை என்பவற்றைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்குத் தலைமை வகிக்க நீதியரசர் ஒருவரை நியமிக்கும்படி புதுடில்லி அரசு உயர் நீதிமன்றத்தைக் கேட்டுள்ளது.

ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள நீதியரசர் வர்மா கமிஷன், ராஜீவ் காந்திக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குறைபாடுகள் பற்றி மட்டுமே விசாரணை செய்யும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## சந்தேக நபர்களுக்காக ஜெத்மலானி ஆஜராவாரா?

### ராஜ்ய சபையில் அவரே மறுப்பு

புதுடில்லி, ஆக. 3

ராஜீவ் காந்தி கொலைச் சந்தேக நபர்களுக்காக தான் ஆஜராக இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை ஜனதா தள் உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான திரு.ராம்ஜெத்மலானி நேற்று மறுத்தார்.

விடுதலைப் புலிகளுடன் தமக்குத் தொடர்பு எதுவுமே

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், முல்லைத்தீவு கிளை.

## பதவி வெற்றிடங்கள்

கீழ்க்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அ. வைத்திய அதிகாரி
ஆ. சுகாதார போதனாசிரியர்
இ. தாதி போதனாசிரியர்

தகைமையுடையோர் 10-8-1991க்கு முன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். இதற்கான நேர்முகப் பரீட்சை 12-8-91 காலை (9-00 மணிக்கு) இப்பணிமனையில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் பெயர்ப் பட்டியல், பணிமனை விளம்பரப் பலகையில் 10-8-91 இல் வெளியிடப்படும். முல்லைத்தீவில் நிரந்தரமாக வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்,
இ. செ. சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [சி/0323]

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

வீரவேங்கை

### அண்ணாத்துரை

[ஐயம்பிள்ளை தவராஜா]

வீர ஜெனனம் 01 - 08 - 1974
வீர மரணம் 20 - 06 - 1991

உள்ளத்தால் இணைந்த உடன் பிறப்பே
அன்பினால் அரவணைத்த எம் ஆசை ராஜா
பாசத்தால் பதைக்கிறோம் கடமைக்காக நீ
கண்ணியமாய் சென்ற வேளை
கொடியவரின் கொடுமையால் கொடுமையாக நீ
மணலாற்று களத்துக்கு சென்றவேளை சிலையானாய்
ஆனாலும் உமது நினைவுகள்
எம் காலம் உள்ளவரை வாழ்ந்திருப்போம்

கொஞ்சேஞ்சி மாதா பேராலயத்தில் காலை 6-00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

ஈமக்கிரியைகள்
இல: 72/28 இராஜசிங்கம் வீதியில் இருக்கும் உறவினர் இல்லத்தில் நடைபெறும்.

உமது பிரிவால் துயருறும்
அப்பா அம்மா உற்றார் உறவினர் நண்பர்கள்
[C/0325]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்:
15 - 06 - 1905

ஆண்டவனடியில்:
04 - 07 - 1991

### திருமதி இராசையா இராசம்மா

என்னைப் பெற்றெடுத்துப்
பெருவாழ்வு வாழவைத்து
இன்னல் வந்தற்றபோது
இருகரமும் நீட்டியணைத்து
அன்னைக்கு அன்னையாய்
என் செல்வங்களுக்கு
அன்னையாய், தந்தையாய்
ஊன்றுகோலாய் உலாவிய
அன்னையே உன்னை
இழந்து திங்கள் ஒன்றானதேயம்மா.

உங்கள் பிரிவால் துயருறும்:
மகள் க. சௌந்தரநாயகி,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல: 24, சீனியர்லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம். (2425)

# ஆயுத ஏற்றுமதி திடீரென அதிகரிக்க இந்தியா முடிவு!

## ஸ்ரீலங்காவிற்கும் கிடைக்கலாம்

ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளபாட ஏற்றுமதியை நிர்ணயிக்கப்பட்ட அளவிலும் பார்க்க நான்கு மடங்காக அதிகரிப்பது என இந்தியா திடீரென முடிவு செய்திருக்கிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அந்நிய செலாவணி பற்றாக் குறையைச் சமாளிக்கவே இந்தத் திடீர் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் இந்தத் தகவலை நேற்று மதுரையில் செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

வருடத்திற்கு 120 கோடி ரூபா என நிர்ணயிக்கப்பட்ட எல்லையை 400 முதல் 500 கோடி ரூபா வரை அதிகரிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் புதுடில்லி சென்றிருந்த ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இந்தியாவிடம் இராணுவ தளபாட உதவிகளைக் கேட்டிருக்கலாம் என்று செய்திகள் வெளியானது தெரிந்ததே.

இராணுவ தளபாட ஏற்றுமதியை அதிகரிக்கும் திட்டத்தின் கீழ் ஸ்ரீலங்காவிற்கும் தளபாடங்கள் ஏற்றுமதி செய்யப்படலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (உ-த)

## அனுமதி

கொழும்பு, ஆக. 3

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய வளாகத்தில் தனியாரும் தங்கம் விற்பனை செய்ய அனுமதி வழங்குவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. [இ-எ]

## போராளிகள் ஊடுருவலைத் தடுக்க

# தமிழகத்துக்கு ஒத்துழைப்பு: பாதுகாப்பு மந்திரி உறுதி

சென்னை, ஆக. 3

தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு தமிழக அரசு எடுக்கும் பணிகளுக்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத் பவார் உறுதி அளித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அமைச்சர் பவாரைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் கடலோரக் காவற் கடற்படையை விஸ்தரிப்பது குறித்தும் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

# சோரன்பற்றுப் பகுதியில் கடும் விமானத் தாக்குதல்

தென்மராட்சி, ஆக. 3

சோரன்பற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் [வியாழன்] பகல் 1.15 மணியளவில் கடும் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சீனச் சகடை, பொம்மர், அவ்ரோ ஆகியன குண்டுகளை வீசின.

சேதங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை.

எனினும் குண்டு வீச்சினால் ஒரு வீடு முற்றாக அழிந்து நாசமானது என்றும், பயன் தரு மரங்கள் பல முறிந்து வீழ்ந்தன என்றும் தெரியவந்தது.

இதே வேளை—

நேற்று முன்தினம் மாலை 4.30 மணி தொடக்கம் மாசார், சோரன்பற்று, புதுக்காடு, பளைப் பகுதி குடியிருப்புகளை நோக்கி படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். [ஒ-117]

## கிட்டுவை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காலத்துக்கு நீடிக்கப்பட்டது.

அதன் பின்னர் தமது விஸாவை மீண்டும் ஆறு மாத காலத்துக்கு நீடிக்குமாறு திரு. கிட்டு பிரிட்டிஷ் உள்துறை அமைச்சிடம் விண்ணப்பித்திருந்தார்.

அந்த விண்ணப்பம் பரிசீலனையில் இருக்கும் வேளையில் பிரிட்டிஷ் அரசு நேற்று அவருக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது.

திரு. கிட்டு பிரிட்டனில் அரசியல் புகலிடம் கோரியிருந்தார். ஆனால் அது தொடர்பாக பிரிட்டிஷ் அரசு அதிகாரபூர்வமாக இதுவரை எந்தப் பதிலும் அளிக்கவில்லை.

ஆனால் அரசியல் புகலிடம் கோரும் அவரது விண்ணப்பத்தை நிராகரிக்க பிரிட்டிஷ் அரசு எண்ணியிருப்பதாக உள்துறை அமைச்சு அவருக்கு தெரியப்படுத்தியிருக்கிறது.

நேற்று அவருக்கு வழங்கப்பட்ட நோட்டீஸுக்கு அவர் பதிலளித்து, மனுச் செய்தால் அந்த மனு பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும் வரை திரு. கிட்டு லண்டனில் தொடர்ந்து தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

திரு. கிட்டு நாடு கடத்தப்படுவதானாலும்—

அவர் விரும்பும் நாட்டுக்கு — அந்த நாடு அவரை ஏற்கத் தயாராக இருந்தால் — அனுப்பி வைக்கப்படுவார் என்று உள்துறை அமைச்சு தெளிவுபடுத்தியிருக்கிறது.

## வியாழனன்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை—

நேற்று முன்தினம் (வியாழன்) ஆனையிறவில் நடந்த மோதலில் 24 படையினர் காயம் அடைந்தனர் என்றே ஸ்ரீலங்கா வெகுசன தொடர்பு சாதனங்களும் வேறு சில செய்தி நிறுவனங்களும் தகவல் வெளியிட்டன. [உ-த-3]

## சந்தேக..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்றார் அவர்.

நேற்று முன்தினம் ராஜ்ய சபையில் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை [illegible] நேற்று அவர் தன்னிலை விளக்கமளித்தார். (உ-த)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



பாரினில் பிறப்பு:
09 - 12 - 1966

பாரதத்தான் அழிப்பு:
26 - 07 - 1989

திதி:
04 - 08 - 1991

### செல்வன் கந்தசாமி சிவகுலசிங்கம்

(இராசன்)
(பருத்தித்துறை போக்குவரத்துச் சபை, பேருந்து நடத்துநர்)

சின்னத்தம்பி கடைசித் தம்பி!
செல்லமாய் வளர்ந்த தம்பி!
செல்லப்பிள்ளை நான் என்றாய் தம்பி!
செல்லாப் பிள்ளையானதேனோ தம்பி!
தங்கமென வளர்ந்த தம்பி! தானாகப் படித்த தம்பி!
பாரதத்தான் வந்து தம்பி!
பாதியிலே முடித்தான் தம்பி!
ஆராரோ ராஜா ஆரிரரோ
ஓம் சாந்தி ராஜா! ஓம் சாந்தி!

-குடும்பத்தினர்.

தென் புலோலி. [17643]

## மரண அறிவித்தல்

திருமதி
### தெய்வானைப்பிள்ளை வேலுப்பிள்ளை

நீர்வேலி, காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவி தெய்வானைப்பிள்ளை காலமானார். அன்னார் காலஞ்சென்ற பெரியகுளம் சோமநாதரின் அன்பு மகளும், ஆயிலியம்மாவின் அன்புத் தாயாரும், ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் கு. தர்மேந்திரத்தின் அன்பு மாமியாரும், பர்லேந்திரன் (கனடா), உஷா, ஜெயராணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [3-8-1991] சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. தர்மேந்திரம்

நீர்வேலி மத்தி. (17728)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [[illegible]] லிமுட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org